Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 24 /2023

## Deposition of P.W.1

| | | |
|---|---|---|
| Name | : | கருப்புசாமி |
| Father's Name | : | நடராஜன் |
| Village | : | கல்லாலங்குடி |
| Religion | : | இந்து |
| Age | : | **35/2023** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 11.08.2023**
(எதிரி இன்று நீதிமன்றத்தில்ஆஜர்.)

**முதல்விசாரணை**

நான் கல்லாலங்குடியில் வசித்து , கம்யூட்டர் சர்வீஸ் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன நவில்ராஜன் எனது மகன் ஆவார். எனக்கு சொந்த ஊர் கல்லாலங்குடி, எனது மனைவியின் ஊர் சிக்கப்பட்டி ஆகும். **11.04.2021** ஆம் தேதி என் மனைவி சிக்கப்பட்டிக்கு சென்றிருந்தார். அன்று மாலை சுமார் **6.00** மணி போல என் மனைவியை பார்ப்பதற்காக நான், எனது இருசக்கர வாகனத்தில் எனது மகன் நவில்ராஜனை முன்னாள் அமர வைத்து கொண்டு சென்றேன். பின்னர் என் மனைவியை பார்த்து விட்டு எனது ஊருக்கு நானும் எனது மகனும் இருசக்கர வாகனத்தில் திரும்பி வந்தோம். அப்போது என் மகனை இருசக்கர வாகனத்தின் முன்னாள் உட்கார வைத்திருந்தேன்.

நான் எனது இருசக்கர வாகனத்தை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓட்டி கொண்டு வந்தபோது எங்களுக்கு எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி டி.என். **30**.ஒய்.**2559** என்ற பதிவெண் கொண்ட குண்டாய் கார் அதிவேகமாக வந்து எனது இருசக்கர வாகனத்தில் முன் பகுதியில் மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனது மகன் இருசக்கர வாகனத்திலிருந்து தனியாக கீழே விழுந்துவிட்டார். அவனது தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. எனக்கு தலை, கால், கை, ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. விபத்து ஏற்படுத்திய காரினை ஓட்டி வந்தவரை நான் விபத்திற்கு பின்னர் சம்பவ இடத்தில் வைத்து பார்த்தேன். அவர் ஆஜர் எதிரி தான். எதிரியின் பெயர் முகமது அஜீபர் என்று தெரிந்து கொண்டேன். சம்பவம் நடந்த இடத்திலீருந்து எனது மனைவியின் அம்மா வீடு சுமார் **200** மீட்டர் தொலைவில் தான் இருக்கிறது. சம்பவம் பற்றி தெரிந்ததும் எனது மனைவியின் உறவினர்கள் அனைவரும் அங்கு வந்துவிட்டனர்.

காயம் பட்ட என்னையும் எனது மகனையும் இருசக்கர வாகனத்தில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு நான் சிகிச்சையில் இருந்தபோது வடகாடு காவல் நிலைய போலீசார் அங்கு வந்து விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றனர். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். சாட்சியால் அளிக்கப்பட்ட புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த **1 1/2** வயதுள்ள எனது மகன் நவில்ராஜன் சிகிச்சை பலனின்றி **14.04.2021** ஆம் தேதி இரவு **11.15** மணிக்கு இறந்துவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரம் பற்றி சொன்னேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என எடுத்துரைக்கப்பட்டது.